ST ALEXIS – JULY 17



# ஜீலை 17 - புனித அலெக்சிஸ்

## (5-ஆம் நூற்றாண்டு)

இவர் ஐந்தாம் நூற்றாண்டில் உரோமையில் பிறந்தார். பெற்றோருக்கு இவர் ஒரே மகன். இவர் சிறு வயதிலேயே உலக மகிமையையெல்லாம் துறந்தார். என்றாலும் பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கி மணமுடித்து, மணமுடித்த அன்றே வீட்டை விட்ட இரகசியமாக வெளியேறினார். மாறுவேடம் பூண்டு தூரமான நாட்டிற்குச் சென்றார். மாதாவின் கோவிலுக்கு அருகில் ஒரு குடிசையில் தரித்திரராக வசித்து வந்தார். இவர் பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சில ஆண்டுகளுக்குப் பின் மக்கள் கண்டுபிடித்து விட்டார்கள். உடனே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி தம் வீட்டிற்குச் சென்றார். அவர் யார் என்று பெற்றோர் கண்டுபிடிக்க முடியவில்லை. தங்குவதற்கு வீட்டில் சிறிது இடம் கொடுத்தார்கள் வேலைக்காரர்களால் வந்த நிந்தை அவமானங்களை இவர் பொறுமையுடன் சகித்தார். ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்தார். கடிதத்தைப் படித்துப் பார்த்த தாய் அழுது புலம்பினார். “ஐயோ, அலெக்சிஸ் என் மகன் அலெக்சிஸ், இத்தனை ஆண்டுகள் நீ என்னுடன் இருந்தும் நான் உன்னை அறியாமல் போனேனே” என்று அழுது புலம்பினார். ஒவ்வொரு நாளும் மனைவியும் பெற்றோரும் தன்னை நினைத்து வாடுவதை இவர் கண்ணால் கண்டு தான் யாரென்று வெளியிடவில்லை. சிலுவையில் உயிர்விட்ட இயேசுவைப் பின்பற்றி தனது துன்பங்களை பொறுமையோடு சகித்தார். அவரது அடக்கச் சடங்கில் உரோமை நகர் முழுவதும் கலந்து கொண்டார்.

<u>சிந்தனை:</u> திவ்விய நன்மை வாங்கியபின் இயேசுவை போதி அளவு உபசரிக்கத் தவறுகிறவர்கள் இறந்தபின் நடுவர் இயேசுவின் முன் நிற்கையில் அலெக்சிஸின் தாயைப்போல் புலம்புவார்கள். “இதோ நடுவர் இயேசு என் விருந்தாளாக ஆயிரம்முறை என்னிடம் வந்தாரே, அவரை நான் சரிவர பயன்படுத்தாது போனேனே” என்று அவர்கள் கதறுவார்கள்.

<u>செபம்:</u> திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, என் விசுவாதத்தைத் திடப்படுத்தும்.